# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.12. 30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம்*

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம்)**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*முன்னுரை.*

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அரசியலமைப்பின் 41இ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**2.** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 41இ ஆனது (இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" என குறிப்பிடப்படும்), உப உறுப்புரைகளான (1), (2), (3) மற்றும் (4) ஆகியவற்றை நீக்கி பின்வரும் உப உறுப்புரைகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"41இ (1) சனாதிபதி அவர்கள் இந்த உறுப்புரை நிரலின் பகுதி 1இல் குறிப்பிட்டுள்ள நீதிபதிகளை, நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே நியமித்தல் வேண்டும்.

(2) இந்த உறுப்புரை நிரலின் பகுதி 2இல் குறிப்பிடப் பட்டுள்ள அலுவலர்களை நியமிக்கும்போது சனாதிபதி அவர்களினால் பிரதம அமைச்சரின் கருத்துக்களை கேட்டறிந்ததன் பின்னர் நியமனங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**3.** அரசியலமைப்பின் உறுப்புரை 43ஆனது, அந்த உறுப்புரையின் உப உறுப்புரை (2)க்குப் பின்னர், உடனடியாக 2(அ) ஆக அமையுமாறு பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தி அமைக்கப்படுகின்றது:-

"(அ) சனாதிபதி அவர்கள் பாதுகாப்பு அமைச்சினை தன்வசம் வைத்திருக்க வேண்டும் என்பதுடன் ஏனைய அமைச்சுக்களை அவர் விரும்பியவாறு மட்டுமே தன்வசம் வைத்திருத்தல் வேண்டும்.".

**4**. அரசியலமைப்பின் உறுப்புரை 46ஆனது, அந்த உறுப்புரை உப உறுப்புரை (1)இன் உப பந்தி (ஆ) இல் உள்ள "நாற்பது" எனும் சொல்லை நீக்கி "முப்பது" எனும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தி அமைக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**5**. அரசியலமைப்பின் உறுப்புரை 46ஆனது அந்த உறுப்புரையின் உப உறுப்புரைகளான (4) மற்றும் (5) ஆகியவற்றை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தி அமைக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**6**. அரசியலமைப்பின் உறுப்புரை 107இன் உப உறுப்புரை (1)ஆனது, "அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற் குட்பட்டது" எனும் சொற்களை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தி அமைக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**7**. அரசியலமைப்பின் உறுப்புரை 111உ இன் உப உறுப்புரை (6)ஆவது பந்தியானது "அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற்குட்பட்டது" எனும் சொற்களை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தி அமைக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*